24—

கடலரிப்புத் தடுப்புச் சுவர்

***12284—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலோரக் கிராமங்களில் ஏற்படுகின்ற கடல் அரிப்பினைத் தடுக்க நிரந்தரமாகத் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலோரக் கிராமங்களில் ஏற்படுகின்ற கடல் அரிப்பினைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இந்த ஆண்டு 22.46 கோடி ரூபாய்க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் மட்டும், 6.13 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் எண்ணுகின்றபோதே அதைச் செயல்படுத்துகின்ற அரசாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். சிறிய கற்களாலும், முறையாகத் தடுப்புச் சுவர் அமைக்காததாலும்தான் கடல் சீற்றத்தால் தடுப்புச் சுவர் நாசமாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 42 கடற்கரைக் கிராமங்கள் இருக்கின்றன. அனைத்துப் பகுதிகளிலுமே தடுப்புச் சுவர் போடப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவில் இராட்சத அலைகளாலும், கடல் சீற்றத்தாலும் பாதிக்கப்படும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் என்பதால், அங்கு*

போடப்பட்ட தடுப்புச் சுவர் நாசமாகிவிட்டது. ஆண்டொன்றிற்கு சுமார் 100 வீடுகள் நாசமாகின்றன. பல கோடி ரூபாய் உடமைகள் நாசமாகின்றன. இதனைத் தடுப்பதற்கு பெரிய பாறைகளால் தடுப்புச் சுவர் அமைக்கவும், நவீனமாகச் செய்யப்பட்ட பெரிய சிமெண்ட கற்களால் தடுப்புச் சுவர் அமைத்து—sand accumulation beach system மூலமாக தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், குறிப்பாக என் தொகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய பகுதிகளில் எப்போது இந்தப் பணிகளை ஆரம்பிப்பீர்கள் என்பதைத் தாங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே மூன்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் அடுத்த நிதியாண்டிலே ஒரு பணி துவங்கப்பட உள்ளது. மேலும், முக்கியமான பணிகள், தேவைப்படுகின்ற பணிகளுக்காக 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

சுற்றுலாத் தலம்

***2596—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—